RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22350

OPEN ACCESS

# சங்கு ஒலியின் மகத்துவம்

ரோ. லில்லிமலர் [அ, *], மு. புட்பகவல்லி [அ]

[அ] தமிழாய்வு மையம், ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அங்கீகாரம் பெற்றது), தமிழ்நாடு இந்தியா

# The Importance of Conch Sound

R. Lillymalar [a, *], M. Puspagavalli [a]

[a] Department of Tamil, A.P.C Mahalaxmi College for Women, (Affiliated by Manonmaniyam Sundaranar University, Thirunelveli) Thoothukudi-628002, Tamil Nadu, India

* Corresponding Author: lillymalarap@gmail.com

Received: 18-03-2022
Revised: 30-06-2022
Accepted: 12-07-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

Sound is an expression of emotions. The primitive man first made a gesture and conveyed his information. Then he made a sound and communicated his need to others. Having thus satisfied his desire by means of various sounds, the man desired to communicate with the Lord, the foremost giver of salvation to his life. So he performed various forms of worship and worship. Among such main forms of worship, conch worship, abishek with conch shell and the practice of invoking the Lord by sounding the conch shell are in practice from the Sangam period till today. The sound produced by blowing the conch shell is called 'Sangunatham'.

**Keywords:** Lord, Beliefs, Worship, Sound, Conch,

## முன்னுரை

ஒலி என்பது உணர்வுகளின் வெளிப்பாடு ஆகும். ஆதிமனிதன் முதலில் சைகையை எழுப்பி தன்னுடைய தகவல்களை தெரிவித்தான். பின்பு ஒலியினை எழுப்பி தன் தேவையைப் பிறருக்கு தெரிவித்தான் (Athiyaman, 2005). இப்படி பலவித ஒலியின் மூலம் தனது விருப்பத்தை நிறைவு செய்த மனிதன் தன்னுடைய வாழ்க்கைக்கு முதன்மையான முக்தியை அளிக்கும் இறைவனுடன் தொடர்பு கொள்ள விரும்பினான். இதனால் பல்வேறு பூஜை முறைகளையும், வழிபாட்டு முறைகளையும் மேற்கொண்டான். அப்படி பட்ட முதன்மையான வழிபாட்டு முறைகளில் சங்கு வழிபாடும், சங்கை வைத்து அபிஷேகம் செய்யும் முறைகளும், சங்கொலி எழுப்பி இறைவனை அழைக்கும் நிகழ்வும் சங்க காலத்தில் இருந்து இன்று வரையிலும் நடைமுறை நிலையில் உள்ளது. இப்படி சங்கு ஊதுவதால் பிறக்கும் சத்தத்தைச் ‘சங்குநாதம்’ என்பர்.

## சங்கில் ஓசை பிறக்கும் நிலை

மூங்கில் எப்படி புல்லாங்குழல் ஆனது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. மூங்கிலில் வண்டுகள் சென்று துளையிட்ட பின்னர் அந்த துளையின் வழியாக காற்றொலியானது உட்சென்று வெளிவரும் தருவாயில் அந்த மூங்கிலில் இருந்து இனிமையான ஓசை பிறக்கிறது. அதைப்போன்று சங்கின் ஓட்டுப் பகுதியில் காற்று புகும் அளவிற்கு துவாரங்களால் ஆன சங்கின் வாய்ப்பகுதி அமைப்பு காணப்படுகிறது. இந்த நிலையில் சங்கின் நுனிப்பகுதியில் இரண்டு மூன்று வளையங்களால் ஆன அமைப்பு ஒன்று காணப்படுகிறது. அந்த வளைவுகளின் நுனிப்பகுதியில்

ஊதுவதற்து ஏற்ற அளவில் சங்கில் துளையிடுவர். இப்போது சங்கானது ஊதுவதற்கு ஏற்ற நிலையில் இருக்கும். இந்த நிலையில் சங்கில் துளையிடப்பட்ட நுனிப்பகுதியில் வாயை வைத்து ஊதுவர். ஒட்டுமொத்த ஆற்றலையும் உட்செலுத்தி சங்கை ஊதும் போது சங்கில் இருந்து ஓசை பிறக்கும்.

## இசைக்கருவியாக பயன்படுத்தப்படும் சங்கு

பழங்காலம் தொட்டே சங்கு இசைக்கருவியாக பயன்படுத்தப்பட்டதற்கு பல வகையான இலக்கிய தரவுகள் ஆதாரமாக உள்ளன. அகழ்வாராய்ச்சியிலும் இதற்கான சான்றுகள் மிகுதியாக கிடைக்கின்றது.

“பிடிக்கணஞ் சிதறும் பெயர் மழைத் கணக்கைப்

பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை” (சிறுபாண்.124-125)

“மணி ஓர்த்தன்ன தெண் குரல்

கணி வாய், பல்லிய காடு இறந்தோரை” (அகநானூறு.51:15)

“வாங்கு மருப்பு யாழொடு பல் இயம் கறங்க” (புறநானூறு281:2)

மேற்குறிப்பிட்ட சான்றுகள் சங்க இலக்கியங்களில் இசைக்கருவியாக சங்கு பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது (Puliyur Kesigan, 2010; Saminathaiyar, 1918). ஆக பண்டைய கால இசைக்கருவிகளில் சங்கும் முதன்மையான இசைக்கருவியாக விளங்குகின்றது (Kirutina Moorthi, 1999).

## சங்கொலியின் மகத்துவம்

ஒரு மனிதன் பிறந்தநாள் முதல் திருமணம் தொடங்கி இறப்பு வரை சங்கானது ஊதப்படுகின்றன. ஆனால் தற்காலத்தில் சங்கானது இறப்புக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. அதுவும் ஒரு சில இடங்களில் மட்டுமே. மேலும் திருமணத்திலும் ஒரு சில இடங்களில் சங்கானது ஊதப்படுகின்றன. சங்கு மகிமைக்குரிய பொருளாக காட்சியளிக்கிறது. சங்கை வீட்டில் வைத்திருப்பவர்களுக்கு சகல ஐஸ்வர்யங்களும் மங்களமும் உண்டாகும். எனினும் சங்கொலியைக் கேட்டால் அவை காதில் தேன் பாய்ந்ததற்குச் சமமாகும். ஆக சங்கொலி கடவுளுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. மனதார கடவுளை நினைத்து சங்கொலி எழுப்பி வழிபட்டால் இறைவன் எங்கு இருந்தாலும் அழைத்தவர் அருகே வருவார் என்பது ஆன்மீக நம்பிக்கை ஆகும். இப்படிப்பட்ட உன்னதமான சங்கின் ஒலியானது தமிழகத்தில் பல்வேறு புண்ணிய தலங்களிலும் வழிபாடு நேரங்களில் சங்கொலித்தல் ஊதப்படுகின்றன.

## சங்கு ஊதுவதால் ஏற்படும் பயன்கள்

சங்கு நம் உடலின் ஆரோக்கியத்திற்கு எப்படி பயன்படுகிறது? என்பதைக் குறித்த செய்திகளை ஆயுர்வேத மருத்துவர் ஷீலா அவர்கள் பின்வருமாறு கூறினார். அவையாவன சங்கு ஊதுதல் என்பது சிறுநீர் பாதை, சிறுநீர்ப்பை, அடிவயிறு, உதரவிதானம், மார்பு மற்றும் கழுத்துதசைகள் போன்றவற்றிற்கு சிறந்த பயிற்சியாக விளங்குகின்றது. மேலும் சங்கு ஊதுவதால் மலக்குடல் தசைகளுக்கு சிறந்த உடற்பயிற்சியைத் தருகின்றது. இது மலக்குடல் தசைகளை வலுப்படுத்தவும் உதவுகின்றது. மற்றும் மலக்குடல் தசைகள் படிப்படியாக பலவீனம் அடைவதால் ஏற்படும் பல சிக்கல்களைத் தடுக்கவும் உதவுகின்றது. மேலும் நாம் சங்கு ஊதும் போது நம்முடைய நுரையீரல் தசைகள் விரிவடைந்து அவற்றின் காற்றோட்ட திறனை மேம்படுத்துகின்றன. நம்முடைய தைராய்டு சுரப்பிகள் சிறந்த முறையில் செயல்பட சங்கு ஊதும்

பயிற்சியை செய்வது நல்லது. சங்கு ஊதுதல் நம்முடைய குரல்வலைகளுக்குச் சிறந்த பயிற்சியாக விளங்குகின்றது. இதனால் நம்முடைய பேச்சு சிக்கல்களைச் சரிசெய்யவும் உதவுகின்றது. நாம் சங்கு ஊதும் போது முகத்தின் தசைகள் நீட்டப்படுகின்றன. எனவே தினமும் சங்கு ஊதினால் தானாகவே நம்முடைய முகத்தில் உள்ள கோடுகளை நீக்க முடியுமாம். எச்சரிக்கையான தகவல்கள் கூட உள்ளது அவை, கவனக்குறைவாக சங்கு ஊதுவது சில வேளைகளில் காது மற்றும் கண் தசைகளை சேதப்படுத்தும். மற்றும் உதரவிதானத்தை சிதைக்கும். எனவே ஒரு நிபுணரிடம் சங்கு ஊதும் கலையைக் கற்றுக்கொள்வது சிறந்தது. பெரும்பாலானோர் செய்யும் தவறு மூக்கிற்கு பதிலாக வாய்வழியாக சுவாசிப்பார்கள். அவ்வாறு வாய் வழியாக சுவாசிக்கும் போது காற்றானது வயிற்றுப் பகுதிக்குச் செல்கின்றது. இவ்வாறு நடக்க கூடாது. எனவே சங்கு ஊதும் போது மூக்கின் வழியாக எப்போதும் உள்ளிழுக்கின்றோமா என்பதை உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும். இதைப்போல உயர் இரத்தஅழுத்தம், குடலிறக்கம், கண்ணழுத்தம் நோய் இருந்தால் சங்கு ஊதுவதைத் தடுக்க வேண்டும். இவை உறுப்புகளுக்கு அழுத்தத்தைக் கொடுக்கும்.

## முடிவுரை

சங்கில் ஒலியை எழுப்பும் போது அது மனிதன் சுவாசத்தையும் மூச்சுக்குழல் பாதையையும் தூய்மை ஆக்குகின்றன. இப்படிப்பட்ட கடல் தாய் ஈன்றெடுத்த அற்புத பொக்கிஷமான உயிர் தான் சங்கு. இத்தகைய சங்கானது தனது உயிரை இழந்த பின்னரும் மனிதருக்கு பல்வேறு வழிகளில் பயன்பட்டு வருகின்றன. இறைவனுக்கு பிடித்த முதன்மையான ஆயுதங்களில் ஒன்றாக சங்கு விளங்குகின்றன. இத்தகைய உயிரற்ற வெண்சங்கில் இருந்து பிறக்கும் ஓசையானது இறைவனையே அழைக்கும் அளவிற்கு வலிமையானது. மகத்துவம் வாய்ந்தது என அறியலாம்.

## References


Athiyaman, N. (2005) Sangu, Tamil Univversity Publications, Thamjavur, India

Kirutina Moorthi, K. (1999) Tamilar Panpattil Sangu, Arul Pathippagam, Chennai, India

Puliyur Kesigan, (2010) Agananuru Moolamum Uraiyum, Saradha Pathipagam, Chennai, India

Saminathaiyar, U.V. (1918) Pathupattu Moolamum Uraiyum, Commerical Press, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License